ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ பராசரபட்டர்

அருளிச்செய்த

அஷ்டச்லோகி.

பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த

வ்யாக்யானங்களுக்கிணங்க எழுதிய

பதவுரையும், விசேஷவுரையும்,

மயிலை. கொ. பட்டாபிராம முதலியாரால்

சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ முத்ராக்ஷலயத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1928

[வி

OFFICE OF THE REGISTRAR OF B
3-MAY 1928
MADRAS

R4
N28
148359

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ பராசரபட்டர்

அருளிச்செய்த

அஷ்டச்லோகி.

பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த
வ்யாக்யாநங்களுக்கிணங்க எழுதிய
பதவுரையும், விசேஷவுரையும்,

மயிலை. கொ. பட்டாபிராம முதலியாரால்

சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ முத்ரணாலயத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1928

காபிரைட்] [விலை அணா 4

श्रीः

श्रीपराशरभट्टार्यैरनुगृहीता

अष्टश्लोकी

श्रीपराशरभट्टार्यः श्रीरङ्गेशपुरोहितः ।
श्रीवत्साङ्कसुतः श्रीमान् श्रेयसे मेऽस्तु भूयसे ॥

अकारार्थो विष्णुर्जगदुदयरक्षाप्रलयकृत्
मकारार्थो जीवस्तदुपकरणं वैष्णवमिदम् ।
उकारोऽनन्यार्हं नियमयति सम्बन्धमनयोः
त्रयीसारस्त्र्यात्मा प्रणव इममर्थं समदिशत् ॥ १॥

मन्त्रब्रह्मणि मध्यमेन नमसा पुंसः स्वरूपं गतिः
गम्यं शिक्षितमीक्षितेन पुरतः पश्चादपि स्थानतः
स्वातन्त्र्यं निजरक्षणं समुचिता वृत्तिश्च नान्योचिता, त
स्यैवेति हरेर्विविच्य कथितं स्वस्यापि नार्हं ततः ॥

अकारार्थायैव स्वमहमथ मह्यं न निवहाः
नराणां नित्यानामयनमिति नारायणपदम् ।
यमाहास्मै कालं सकलमपि सर्वत्र सकला
स्ववस्थास्वाविः स्युर्मम सहजकैङ्कर्यविधयः ॥ ३॥

देहासक्तात्मबुद्धिर्यदि भवति पदं
साधु विद्यात्तृतीयं
स्वातन्त्र्यान्धो यदि स्यात् प्रथम
मितरशेषत्वधीश्चेद्द्वितीयम् ।
आत्मत्राणोन्मुखश्चेत्
नम इति च पदं बान्धवाभासलोलः,
शब्दं नारायणाख्यं
विषयचपलधीश्चेच्चतुर्थीं प्रपन्नः ॥ ४॥

நேத்ருத்வம் நித்யயோகம்
ஸமுசிதகுணஜாதம் தநுக்²யாபநம் ச ।
உபாயம் கர்தவ்யபா⁴க³ம்
த்வத² மிது²நபரம் ப்ராப்யமேவம் ப்ரஸித்³த⁴ம் ।
ஸ்வாமித்வம் ப்ரார்த²நாம்ச
ப்ரப³லதரவிரோதி⁴ப்ரஹாணம் த³ஶைதாந் .
மந்தாரம் த்ராயதே சேத்யதி⁴க³தநிக³ம:
ஷட்பதோ³(அ)யம் த்³விக²ண்ட³: ॥ ௫॥

ஈஶாநாம் ஜக³தாமதீ⁴ஶத³யிதாம் நித்யாநபாயாம் ஶ்ரியம்
ஸம்ஶ்ரித்யாऽऽஶ்ரயணோசிதாகி²லகு³ணஸ்யாங்க்⁴ரீ ஹரேராஶ்ரயே । இஷ்டோபாயதயா ஶ்ரியா ச ஸஹிதாயாऽऽத்மேஶ்வராயார்த²யே, கர்தும் தா³ஸ்யமஶேஷமப்ரதிஹதம் நித்யம் த்வஹம் நிர்மம: ॥ ௬॥

மத்ப்ராப்த்யர்த²தயா மயோக்தமகி²லம் ஸந்த்யஜ்ய த⁴ர்மம் புந:
மாமேகம் மத³வாப்தயே ஶரணமித்யார்தோ(அ)வஸாயம் குரு ।
த்வாமேவம் வ்யவஸாயயுக்தமகி²லஜ்ஞாநாதி³பூர்ணோ ஹ்யஹம்,
மத்ப்ராப்திப்ரதிப³ந்த⁴கைர்விரஹிதம் குர்யாம் ஶுசம் மா க்ருதா:॥

நிஶ்சித்ய த்வத³தீ⁴நதாம் மயி ஸதா³ கர்மாத்³யுபாயாந் ஹரே! கர்தும் த்யக்துமபி ப்ரபத்துமநலம் ஸீதா³மி து³:கா²குல: । ஏதஜ்ஜ்ஞாநமுபேயுஷோ மம புந: ஸர்வாபராத⁴க்ஷயம், கர்தாஸீதி த்³ருடோ⁴(அ)ஸ்மி தே து சரமம் வாக்யம் ஸ்மரந் ஸாரதே²: ॥ ௮॥

அஷ்டஶ்லோகீ ஸமாப்தா.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ பராசரபட்டர்

அருளிச்செய்த

அஷ்ட ச்லோகி.

பூர்வர்களருளிச்செய்த வியாக்கியானத்திற் கிணங்க,

பதவுரை, பொழிப்புரை, விசேடவுரையும்,

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராயும் ஸ்ரீகூரத்தாழ்வான் திருக்குமாரருமான ஸ்ரீபராசர பட்டரென்னும் பூர்வாசார்யர் ஸர்வ ஶேஷியான ஸ்ரீமந்நாராயண னுடையவும் அவனுக்குச்சேஷ பூதர்களான இஜ்ஜீவர்களுடையவும் ஸ்ரூபோபாய புருஷார்தங்களைத் தெளிவாகச்சொல்லுவதால் ஸகலவேதாந்த ஸாரங்களான பகவந்மந்த்ரங்களிலும் ஸாரதமங்களாகவிருக்கும் மந்த்ரங்களான திருமந்த்ரம் த்வயம் சரமஶ்லோகங்களாகிற ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்கள் ப்ரபன்னர்களுக்குஸர்வப்பிரயத்னத்தாலும் அவஶ்யம் அறியவேண்டியவைகளாக விருப்பதால் இவற்றில் அபேக்ஷையுள்ளவர்களான ப்ரபன்னர்களிடங்களில் அநுக்ரஹத்தால் இவற்றின் அர்த்தங்களை எட்டுஶ்லோகங்களினால் ஸங்க்ரஹித்தருளினார். இவற்றுள் முன்னமே இவ்வாசார்யர் தனியன் அனுஸந்திக்கப்படுகின்றது.

தனியன்

ஸ்ரீ பராஸரபட்டார்ய ஸ்ரீ ரங்கேஸ புரோஹிதஃ.
ஸ்ரீ வத்ஸாங்க ஸுதஃ ஸ்ரீ மான் ஸ்ரேயஸே மேஸ்து பூயஸே.

பதம்	உரை
ஸ்ரீரங்கேஸ	ஸ்ரீரங்கநாதனுக்கு
புரோஹிதஃ	புரோஹிதராயும்
ஸ்ரீவத்ஸாங்க	கூரத்தாழ்வானுக்கு
ஸுதஃ	திருக்குமாரராயும்
ஸ்ரீமான்	ஞானஸம்பத்தையுடைய
ஸ்ரீபராஸரபட்டார்யஃ	ஸ்ரீபராசரபட்டரென்னும் ஆசார்யரானவர்
மே	எனக்கு
பூயஸே	அதிகமான
ஸ்ரேயஸே	நன்மையும்பொருட்டு
அஸ்து	ஆகக்கடவர்.

ஸ்ரீ அழகிய மணவாளனுக்குப் புரோஹிதகைங்கர்யம் செய்கிறவராயும் ஸ்ரீகூரத்தாழ்வான் திருக்குமாரராயும் பிரஹ்மஜ்ஞானியுமான ஸ்ரீ பராஸரபட்டரென்னும் பூர்வாசார்யர் எனக்கு அநேக நன்மையை யுண்டாக்கக் கடவர்.

அஷ்ட ச்லோகீ

1 அகாரார்த்தோ விஷ்ணுஃ ஜகதுதயரக்ஷா ப்ரளயக்ருத்
மகாரார்த்தோ ஜீவஃ ததுபகரணம் வைஷ்ணவ மிதம்
உகாரஃ அந்யார்ஹம் நியமயதி ஸம்பந்தமநயோஃ
த்ரயீஸாரஃ த்ரியாத்மா ப்ரணவஇமமர்த்தம் ஸமதிஸத்.

இவ்வாசர்யர் மூன்றுரஹஸ்யங்களில் முதலாவதான இத் திருமந்த்ரத்தில் சுருங்கச் சொல்லப்பட்டிருக்கும் உபாயோபேயங்களை த்வயம் விவரித்துச் சொல்லுவதாலும் இத்வயத்தில்சொல்லப்படும் உபாயோபேயங்களைப் பெறுவதற்கு அவஸ்யமறியவேண்டியவைகளான உபாயாந்தர த்யாகம் ஸர்வபாபநிவ்ருத்தி இவைகளை சரமஸ்லோகம் சொல்லுவதாலும் இவ்விரண்டு ரஹஸ்யங்களுக்கும்

மூலபூதமாகவிருக்கும் இத்திருமந்த்ரத்தின் அர்த்தத்தை அருளிச் செய்யத்துடங்கியவராய் இத்திருமந்த்ரத்திலும் முதலில் ஓதப்படும் இப்பிரணவத்தில் அடங்கிய அகார, உகார, மகாரங்களின் அர்த்தத்தை இம்மந்திர ஶேஷத்தின் பதங்களான நாராயண, நம:-நார-என்னும்பதங்கள் சொல்லுவதால் இவற்றிற்கும் மூலபூதமான இப்பிரணவத்தின் அர்த்தத்தை முதலில் அருளிச்செய்கிறார்.

ஜகத்=உலகங்களுடைய
உதய=உத்பத்தியென்ன
ரக்ஷா=இரக்ஷணமென்ன
ப்ரளய=ஸம்ஹாரமென்ன இவைகளை
க்ருத்=செய்கின்ற
விஷ்ணு:=ஸர்வவியாபியான பகவானானவர்
அகாரார்த்த:=இப்பிரணத்திலடங்கிய அகாரத்திற்கு பொருளாகவிருக்கிறார்.
ஜீவ:=பத்தமுக்த நித்யர்களான மூன்றுவிதஜீவர்களானவர்கள்
மகாரார்த்த:=மகாரத்திற்குப் பொருளாக விருக்கிறார்கள்.
வைஷ்ணவம்=விஷ்ணுவினிடத்தினின்றும் உண்டாயிருக்கும்
இதம்=இஜ்ஜீவர்களின் கூட்டமானது
தத்=அந்தபகவானுக்கு
உபகரணம்=உபயோகிக்கத்தக்க வஸ்துவாக (இருக்கின்றது)
உகார:=உகாரத்திற்கு அர்த்தமான பிரிநிலையானது
அநயோ:=இப்பரமாத்மஜீவாத்மாக்களின்
ஸம்பந்தம்=(ஶேஷிஶேஷபாவரூபமான) உறவை
அநன்யார்ஹம்=வேறொருவருக்கும் தகாததாக
நியமயதி=நியமிக்கின்றது.
த்ரயீ=மூன்றுவேதங்களின்
ஸார:=ஸாரமாயும்
த்ரி=மூன்றெழுத்துகளான அகர உகரமகரங்களை,
ஆத்மா=ஸ்வரூபமாகஉடைய
ப்ரணவ:=பிரணவமானது
இமம்=மேற்சொல்லிய விவ்வர்த்தத்தை,
ஸமதிஶத்=நன்றாய்ச்சொல்லிற்று.

ஜகத்துக்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறவராயும் ஸர்வவியாபியுமான பகவானானவர் இப்பிரணவத்திலடங்கிய அகாரத்திற்கு அர்த்தமாக விருக்கிறார். பத்தமுக்த நித்யர்களான மூன்றுவிதஜீவர்களும் இம்மகாரத்திற்கு அர்த்தமாகவிருக்கிறார்கள்.

பகவானிடத்தினின்றும் உண்டாயிருக்கும் இஜ்ஜீவர்கள் பகவானுக்குச்சேஷபூதர்கள் என்பதை இவ்வகாரத்தின்மேல் லோபித்துக்கிடக்கும்நான்காவது வேற்றுமைசொல்லுகின்றது. இப்பிரணவத்திலடங்கியஉகரம் இஜ்ஜீவ பரமாத்மாக்களுக்கு ஒருவர்க்கொருவருண்டாயிருக்கும்ஶேஷஶேஷித்வரூபஸம்பந்தத்தை லக்ஷ்மீபாகவதர் ஆசார்யர் இவர்களொழிந்த மற்றவர்களுக்குத் தகாததாக நியமிக்கின்றது. இவ்வாறு மூன்றுவேதங்களின் ஸாரமான பிரணவமானது இவ்வர்த்தத்தை வெளிப்படச் சொல்லுகின்றது.

2 மந்த்ர ப்ரஹ்மணி மத்யமேந நமஸா பும்ஸஃஸ்வரூபம்கதிஃ
கம்யம்ஶிக்ஷிதமீக்ஷிதேன புரதஃ பஶ்சாதபிஸ்தாநதஃ
ஸ்வாதந்த்ரியம்நிஜரக்ஷணம் ஸமுசிதாவ்ருத்திஶ்ச நாந்யோசிதா
தஸ்யைவேதிஹரேர்விவிச்ய கதிதம் ஸ்வஸ்யாபி நார்ஹம்ததஃ.

இவ்வாறு பிரணவத்தை வியாக்கியானஞ்செய்து பின்புநமஃ என்னும் பதத்தைவியாக்கியானம் செய்கிறார்.

மந்த்ர=மந்திரங்களினுள்
ப்ரஹ்மணி=பிரஹ்மம்போல்உயர்ந்ததான திருவஷ்டாக்ஷரத்தில்
மத்யமேன=நடுவிலிரானின்றும்
புரதஃ=முன்னிரானின்ற (பிரணவத்தோடு)
ஈக்ஷிதேன=சேர்க்கப்பட்டிருக்கும்
நமஸா=நமஃ என்னும் ஶப்தத்தினால்
பும்ஸஃ=ஜீவனுடைய
ஸ்வரூபம்=ஶேஷத்வமாகிற ஸ்வரூபமானது
ஶிக்ஷிதம்=சோதிக்கப்படுகின்றது;
ஸ்தாநதஃ=அதிருக்கும்ஸ்தானத்தில் ஆவிருத்தியால்லப்யமான (கிடைத்திருக்கும்) அகண்டநமஸ்ஸோடுசேர்க்கப்பட்டிருக்கும் ஸகண்டமான-நமஃஎன்னும் பதத்தினால்
கதிஃ=உபாயமானது சோதிக்கப்படுகின்றது.
பஶ்சாத்=பின்னிருக்கும்(நாராயணாய என்னும்பதத்தோடு) சேர்க்கப்படடிருக்கும் ஸகண்டமான நமஃ என்னும்பதத்தினால்
கம்யம்=பெறத்தக்கதானகைங்கர்யமானது
(ஶிக்ஷிதம்)=சோதிக்கப்படுகின்றது.

தஸ்ய=அப்படிக்கு ஸர்வஸ்வதந்திரனாக ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும்
ஹரேரேவ=பகவானுக்கே (தக்கது வேறொருவருக்கும் தக்கதன்று)
ஸ்வாதந்திரியம்=ஸ்வாதீனமாகவிருக்குகையானது,
நிஜரக்ஷணம்=தம்மைரக்ஷிக்கையம்
ஸமுசிதா=சேஷபூதர்களான விஜ்ஜீவர்களுக்குத்தக்கதான
வ்ருத்திஶ்ச=கைங்கர்யமும்ஸர்வஶேஷியாகவிளங்கு மந்த பகவானுக்கே தக்கது.
அந்யோசிதா-ந=வேறொருவருக்கும் தக்கதன்று
இதி=இந்தப்படிக்கு
விவிச்ய=பிரித்து
கதிதம்=சொல்லப்பட்டது,
ததஃ=ஆகையால்
ஸ்வஸ்யாபி=பரமாத்மாவுக்கும் தனக்கும்
ந அர்ஹம்=தக்கதன்று.

மந்த்ரபிரஹ்மமான இத்திருவஷ்டாக்ஷரத்தின் நடுவிற்சொல்லப்படும் நமஃ என்னும் பதத்தைஇதற்குமுன்னிருக்கும் பிரணவத்தோடுசேர்ந்த மகாரத்துடனும்பின்னிருக்கும் நாராயணயவென்னும் பதத்துடனும் அவ்விடத்திலேயேஇரண்டுதரம்ஆவிருத்திசெய்துசேர்க்கப்பட்டிருக்கும்நமஃ என்னும்பதத்துடனும்ஆகமூன்றுவிடங்களிலும்சேர்த்து அர்த்தம்செய்வதால்இஜ்ஜீவனுக்குஸ்வரூபஉபாயபுருஷார்த்தங்களாகிற மூன்றுகளும் நன்றாய்சோதிக்கப்படுதாகின்றன. அதெப்படிக்கென்றால்நமஃஎன்னும்ஸகண்டமானநமஃஶப்தத்தைபிரணவத்தோடுசேர்த்து அர்த்தம்செய்தால்இஜ்ஜீவன் பரமாத்மாவுக்கே சேஷன் தன்னுடையவனன்று என்று அர்த்தமாவதால் இஜ்ஜீவனுக்குச்சுதந்திரம் கிழிந்து இவன்பரமாத்மாவுக்கே சேஷனென்னும் ஸ்வரூபம் தெளிவாய்க்காட்டப்படுகின்றது. இந்த நமஃ என்னும் பதத்தையே நமஃ நமஃ-என்று இரண்டுதரம் ஆவிருத்திசெய்து அவ்விடத்திலேயே அர்த்தம்செய்தால் உபாயம் ஜீவனுடையதன்று என அர்த்தமாவதால் இப்பரமாத்மா செய்விக்க இஜ்ஜீவன்உபாயத்தைச்செய்வதால் அவனுக்குப்போல இவனுக்கு உபாயத்தில் பிரதான கர்த்ருத்வமில்லையென்று உபாயத்தின் ஸ்வரூபம்தெளிவாய் காட்டப்பட்டதாகின்றது. இந்தநமஃஶப்தத்தைபின்னிருக்கும் நாராயணயவென்னும் பதத்தோடுசேர்த்து அர்த்தம் செய்தால் ஸ்ரீமந் நாராயணனுக்கே ஸகலவித கைங்கர்யத்தையும்

செய்யக்கடவேன்எனக்காக செய்யக்கடவேனல்லேன் என்று அர்த்தமாவதால் அக்கைங்கர்யத்தில் தன் பிரயோஜனம் கழிந்துவிடுவதால் பிராப்யஸ்வரூபம் தெளிவாய்க் காட்டப்பட்டதாகின்றது. இதனால் ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் இவைகள்தெளிவாய் காட்டப்பட்டதாகின்றன. ஆகையால் ஸ்வாமியாயிருக்குகை, தன்னை இரக்ஷிப்பது, சேஷத்வரூபமான பகவத்கைங்கர்யம், இவைகள் பகவானுக்கே தகுமேயொழிய வேறொருவருக்கும் தகாதென்றதாயிற்று. இவ்வாறு மூன்றிடங்களில் சேர்த்து அர்த்தம் செய்யப்பட்டிருக்கும் ஸகண்டமான நமஶ்ஶப்தத்தினால் விவரித்துச்சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஸ்வாமித்வம்முதலிய இம்மூன்றுகளும் பரமாத்மாவுக்குத் தக்கவைகளேயன்றி இஜ்ஜீவபரமாத்மாக்களிருவருக்கும் பொதுவாகத்தக்கவைகளுமன்று இஜ்ஜீவன் பரமாத்மாவையொழிய வேறொருவருக்கும் ஶேஷனல்லன் வேறொருவரையும் இரக்ஷகராகவுடையவனுமல்லன் வேறொன்றையும் பேறாகவுடையவனுமல்லன், என்னும் ஆகாரத்ரயம் ஸித்தித்ததாயிற்று.

இவ்வாறு இரண்டுஶ்லோகங்களினால் பிரணவத்தினுடையவும் நமச்சப்தத்தினுடையவும் அர்த்தங்களைச்சொல்லி இந்த. ங-வதுஶ்லோகத்தினால் நாராயணசப்தத்தின் அர்த்தத்தையருளிச்செய்கிறார்.

3 அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா
நராணாம் நித்யாநாம் அயநமிதி நாராயணபதம்
யமாஹாஸ்மை காலம் ஸகலமபி ஸர்வத்ர ஸகலாஸு
அவஸ்தாஸ்வாவிஸ்யுః மமஸஹஜ கைங்கர்ய விதயః.

அஹம்=யான்,
அகாரார்த்தா யைவ=அகாரத்திற்கு அர்த்தமான பரமாத்மாவுக்கே,
ஸ்வம்=சேஷன்.
அத=பின்பு
அஹம்=யான்,
மஹ்யம்=எனக்கு,
ந=சேஷனன்று,

(1) நராணாம்=நரங்களென்று சொல்லப்படும்,
நித்யாநாம்=நித்தியங்களாகவிருக்கும் ஞானம், ஆனந்தம், அமலத்வம், சக்தி, வாத்ஸல்யம், ஸௌசீல்யம்-இவைமுதலியதிவ்யாத்ம குணங்களுடையவும், திவ்யமங்களவிக்கிரஹம் அவைகளின் குணங்களானகாந்தி,

ஸௌகுமார்யம், முதலியவை களுடையவும், திவ்யபூஷணங் களுடையவும், திவ்யாயுதங்க ளுடையவும், நித்தியஸூரிகளு டையவும, பகவானுடைய உப சாரங்களின் ஸாதனங்களான சத்ரசாமராதிகளுடையவும்.
த்வாரபாலர், கணதிபர்-முக் தர், பரமாகாசம், மூலப்பிரகி ருதி, பத்தாத்மாக்கள், காலம் மஹாதாதிவிகாரங்கள், அண் டங்கள், அண்டங்களிந்நடுவி லிருக்கும்பதார்த்தங்கள், இ வைகளுடையவும்
நிவஹ(ஸ்ய)=கூட்டத்திற்கு
அயநம்=ஆதாரம், (பின்னும்)
(2) நராணும்=நரர்களென்று சொல்லப்படும்
நித்யாநாம்=நித்யர்களான ஜீவர் களுடைய
நிவஹ(ஸ்ய)=கூட்டத்திற்கு
அயநம்=ப்ராப்யம், ப்ராபகம்(பி ன்னும்)
(3) நராணும்-நித்யாநாம்=நித்ய ர்களாகவிருக்கும் ஜீவாத்மாக் களினுடைய,

நிவஹஃ=கூட்டமானது
(யஸ்ய)=எந்தபரமாத்மாவுக்கு,
அயநம்=ஆதாரமோ.
(ஸஃ=அந்தபரமாத்மாநாராயண ன்,)
இதி=என்று,
யஃ=எந்தபகவானை,
நாராயணபதம்=நாராயணு வெ ன்னும் பதமானது,
ஆஹ=சொல்லுகின்றதோ,
அஸ்மை=இந்த பகவானையும் பொருட்டு,
ஸகலம்=ஸமஸ்தமான,
காலம்=காலங்களிலும்
ஸர்வத்ர=ஸ்ர்வதேசங்களிலும்,
ஸகலாஸு=ஸமஸ்தங்களான,
அவஸ்தாஸு=அவஸ்தைகளிலு ம்,
மம=எனக்கு,
ஸஹஜ=ஸ்வபாவத்தினுலுண்டா யிருக்கும்,
கைங்கர்யவிதயஃ=கைங்கர்யங்க ளானவை
ஆவிஸ்யுஃ=வழிப்படக்கடவன்.

பிரணவத்தின் அகாரார்த்தமான பகவானுக்கே யான்சேஷபூதன், எனக்கு நான்ஶேஷனன்று (இதனல்பிரணவநமஸ்ஸுகளின் அர்த் தங்களை அனுவாதம்செய்தபடி) நரஎன்னும் ஶப்தத்திற்கு நித்யங்க ளென்று அர்த்தம். அவைகள்மேற்சொல்லிய ஞாநாநந்தா மலத்வா திகளானகுணம் முதலியவைகள். நாரம் என்றால் அவைகளின் கூட் டங்கள். அயநம்-என்றால்(ப்ராப்யம், ப்ராபகம், ஆதாரம் என்றும்

அர்த்தம், இதனால் நித்யங்களாகச் சொல்லப்படும் ஞாநாநந்தாதி களுக்கு ஆதாரமென்று ஓர் அர்த்தமாகின்றது. மேற்சொல்லிய குணங்களில் ஞானம்முதலாகக்காலவரையிலுமுள்ளவைகள், அதின் தன்மையாலேயே நித்யங்களாக விருக்கின்றன. மஹதாதிதத்வ ங்கள் ப்ரவாஹத்தினால்நித்யங்களாம். தன்மையால் நித்யங்களாவன உத்பத்திவிநாசமன்றியில் இருப்புள்ளவைகளா யிருககுமவைகள். ப்ரவாஹநித்யங்களாவன உத்பத்திநாசங்களுள்ளவைகளா யிருக்கச் செய்தேயும் முன்னிருந்தநாமரூபங்கள் மாறுதலவைகளாகஉண்டாயி ருக்குமவைகள், பின்னும் நரர்களென்று செல்லப்படும் ஜீவர்களின் கூட்டத்திற்குபிராப்யரென்றும் பிராபகரென்றும் இரண்டாவது ஓர் அர்த்தம்ஆகின்றது. இவ்வர்த்தங்களினால் பகவானுக்குப்பரத்வம் ஸித்திக்கின்றது (பின்னும்) நரர்களென்றுசொல்லப்படும்ஜீவர்களி ன்கூட்டத்தை ஆதாரமாகவுடையவர் பரமாத்மாவென்று மூன்று வது ஓர் அர்த்தம் ஆகின்றது. இதனால் பகவான்ஸர்வர்களுடையவு ம்உட்புகுந்திருக்கிறாரென் றேர்ப்படுவதால்பகவான் ஸர்வாந்தர்யா மியென்றும் ஸர்வஸுலபரென்றும் சொல்லப்பட்டதாகின்றது. இவ்வாறு எந்தபகவானை நாரயணசப்தம்சொல்லுகின்றதோ இந்த பகவானையும்பொருட்டு ஸர்வகாலங்களிலும் ஸர்வதேசங்களிலும் நிற்பது உட்காருவது படுப்பதுமுதலிய ஸர்வாவஸ்தைகளிலும் என க்கு ஸ்வபாவஸித்தங்களாக விருக்கும் ஸகலவிதகைங்கர்யங்களும், இவைகளுக்கு விரோதிகளாகவிருக்கும் அநாதிகர்மங்கள் கழிந்தவா றே தன்னால்வழிப்படக்கடவன ஆகச்செய்தே, இத்திருமந்திரத்திலிரு க்கும் பிரணவத்தால் இஜ்ஜீவர்களுக்குசேஷத்வமும் நமச்சப்தத் தால் பரமாத்மாவுக்கு பராதீனனாக விருக்குகையும் நராயணசப்த த்தால் பரமாத்மாவுக்கு கைங்கர்யம் செய்வதும் சொல்லித்தாயிற் றென்பது கருத்தாம்.

இவ்வாறு மூன்றுஶ்லோகங்களினால் இத்திருமந்த்ரத்தின் அர் த்தத்தைத் தெரிவித்து பிரபன்னர்களுக்குப் பின்பு ஏதாவது ஓர் தீங்கினால் தேஹாத்ம ப்ரமம் முதலியவைகள் உண்டாகாம லிருப் பதற்காக இவ்வர்தானு ஸந்தானம் அவஶ்யம் செய்யவேண்டுமென் றும் திருவுள்ளத்தினால் இதையருளிச்செய்கிறார்.

4 தேஹாஸக்தாத்மபுத்திः யதிபவதிபதம்
ஸாதுவித்யாத் த்ருதீயம்
ஸ்வாதந்த்ர்யாந்தோ யதிஸ்யாத் ப்ரதமம்
இதரஶேஷத்வதீஶ்சேத் த்விதீயம்
ஆத்மத்ராணோன்முகஶ்சேத்
நமஇதிசபதம் பாந்தவாபாஸலோல
ஶப்தம் நாராயணாக்யம்
விஷயசபல தீஶ்சேத் சதுர்த்தீம் ப்ரபந்நः.

பதவுரை.

ப்ரபன்னः=பிரபத்திசெய்தவரானவர்
தேஹே=தனது தேஹத்தில்
ஆஸக்த=ஸம்பந்தித்த
ஆத்ம=ஆத்மாவென்கிற
புத்திः=புத்தியையுடையவராய்
பவதியதி=ஆய்விடுவராகில்
த்ருதீயம்=மூன்றாவதான
பதம்=பதத்தின் (அர்த்தத்தை)
ஸாது=நன்றாக
வித்யாத்=அரியவேண்டும்.
ஸ்வாதந்த்ரய=ஸ்வதந்திரனென்கையால்
அந்தः=மூடராக
பவதியதி=ஆய்விடுவராகில்
ப்ரதமம்=பிரணவத்தின் முதல் பதத்தின் (அர்த்தத்தை)
ஸாது=நன்றாக
வித்யாத்=அறியவேண்டும்.
இதர=பெருமாள் பிராட்டி பாகவதர் ஆசார்யர்-இவர்களை யொழிந்தவர்களுக்கு
ஶேஷத்வ=ஶேஷனாகவிருக்குகையில்
தீஶ்சேத்=புத்தியுண்டாகுமாகில்
த்விதீயம்=பிரணவத்தில்-இரண்டாவது பதத்தின் அர்த்தத்தை
ஸாது=நன்றாக
வித்யாத்=அறியவேண்டும்.
ஆத்ம=தன்னுடைய
த்ராண=இரக்ஷணத்தில்
உன்முகஶ்சேத்=முயர்ச்சியுடையவராகவிருப்பராகில்
நம இதி=நமः என்னும்
பதம்=பதத்தை
ஸாது=நன்றாக
வித்யாத்=அறியவேண்டும்,
பாந்தவாபாஸ=பந்துக்களாகத் தோற்றுமவர்களிடங்களில்
லோலஶ்சேத்= ஆசையுள்ளவராகவிருப்பராகில்
நாராயண=நாராயணனென்று

ஆக்யம்—பிரஸித்தியையுடைய
பதம்—பதத்தின் (அர்த்தத்தை)
ஸாது—நன்ருக
வித்யாத்—அறியவேண்டும்.
விஷய—ஶப்தாதிவிஷயங்களில்
சபல—ஆசையுள்ளதாகவிருக்கு
ம்
தீஸ்சேத்—புத்தியுடையவராக
வீருப்பராகில்
சதுர்த்தீம்—நாராயணபதத்தின்
மேலிருக்கும் நான்காவதுவே
ற்றுமையினுடைய (அர்த்தத்
தை)
ஸாது—நன்ருக
வித்யாத்—அறியவேண்டும்.

(பகவானிடத்தில் ப்ரபத்திச்செய்தவரான ப்ரபன்னர் தைவ வசத்தால் தமக்குண்டாகும் புத்திப்பிழையால் தன்தேஹத்திலே யே ஆத்மாவென்னும் புத்திமுதலிய தோஷங்கள் உள்ளவராகில் அப்பொழுது ப்ரணவத்தின் மூன்ருவது பதமான மகாரத்தின் அர்த்தத்தை அனுஸந்திக்கவேண்டும். அம்மகாரத்திஞல் ஜடமாயும் அசேதனமாயு மிருக்கும் தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாயும் ஜ்ஞாநாநந்தகுணமாயும் அணுஸ்வரூப மாயுமிருக்கும்ஆத்மவஸ்து சொல்லப்படுவதால் அவ்வஜ்ஞானம்தீர் ந்துவிடும். தான்ஸ்வதந்திரனென்னும் எண்ணத்தால் பகவத்சேஷ மானதன்ஸ்வரூபத்தை மறந்திருப்பாஞகில் அப்பொழுது ப்ரணவ த்தின் முதற்பதமான அகாரத்தின் அர்த்தத்தை அனுஸந்திக்கவே ண்டும். அதின்மேலேறிலோபித்திருக்கும் நான்காவது வேற்றுமை யோடுகூடிய அகாரத்திஞல் ஸர்வகாரணமாயும், ஸர்வரக்ஷகமாயும், ஸர்வ ஸம்ஹாரகமாயும், லக்ஷ்மீபதியாயும், ஸர்வசேஷியாயும், ஸர் வகல்யாண குணங்களோடு கூடியதாயுமிருக்கும் பரமாத்மவஸ்து சொல்லப்படுகின்றது. அவ்வர்த்தத்தையநுஸந்திப்பதால் பகவான் ஸர்வ ஸ்வதந்திரனென்னும் இச்சேதநன் அவனுக்குப் பராதீநனென் னும் ஞாநமுண்டாவதால் தான் ஸ்வதந்திரனென்னும் அஜ்ஞானம் தீர்ந்துவிடும்.

பெருமாள் பிராட்டி பாகவதர்கள் ஆசார்யர்கள் இவர்களையொ ழிந்த மற்றவர்களுக்கும் தான் சேஷஞகக்கூடுமென்னும் அஜ்ஞா னத்தோடுகூடியவராகில் அப்பொழுது ப்ரணவத்தின் இரண்டா வது பதமான உகாரத்தின் அர்த்தத்தை அனுஸந்திக்கவேண்டும். அந்த உகாரத்திஞல் இஜ்ஜீவ பரமாத்மாக்களுக்கு ஒருவர்க்கொரு

வர் உண்டாயிருக்கும் சேஷசேஷித்வரூப ஸம்பந்தம் வேறொருவற்கும்தகாதென்று சொல்லப்படுவதால் தான் பிறர்க்கும் சேஷனாகக் கூடுமென்னும் அஞ்ஞானம் தீர்ந்துவிடும்.

தன்னை இரக்ஷித்துக்கொள்ள ஸ்வதந்திரனாய் பிரயத்தினப்படுவாராகில் அப்பொழுது நம: என்னும் பதத்தின் அர்த்தத்தையனுஸந்திக்கவேண்டும். ஸகண்டநமஸ்ஸோடுகூடிய அந்நமச்சப்தத்தால் உபாயம் தன்னுடையதன்றென்னும் அர்த்தம் கிடைப்பதால் உபாயத்திற்குத்தான் ஸ்வதந்திரகர்தாவென்னும் அஞ்ஞானம் தீர்ந்துவிடும்.

தனக்கு பந்துக்களாகத்தோற்றும் புத்திரமித்ர களத்திராதிகளிடங்களில் ஆசையுள்ளவராக இருப்பாராகில் அப்பொழுது நாராயணவென்னும்பதத்தின் அர்த்தத்தை அநுஸந்திக்கவேண்டும். அந் நாராயணபதத்தின் இரண்டாவது அர்த்தத்தினால் ஸகலவித பந்துக்களும் ஸ்ரீமந்நாராயணனே யென்னும் அர்த்தம்கிடைப்பதால் பிறர்கள் நமக்கு பந்துக்களென்னும் அஜ்ஞானம் தீர்ந்துவிடும்

ஶாஸ்திர ஸம்மதங்களாகவும் ஶாஸ்திரஸம்மதங்க ளாகாதவைகளுமான ஸ்த்ரீமுதலிய துர்விஷயங்களில் ஆசையுள்ளவராக விருப்பாராகில் அப்பொழுது நாராயணபதத்தின்மேலிருக்கும் நான்காவது வேற்றுமையின் அர்த்ததை யநுஸந்திக்கவேண்டும். அந்நான்காவது வேற்றுமையினால் ஸ்ரீமந் நாராயணனுக்காகவே அவன் திருவுள்ள முகக்கும்படியாய் கைங்கர்யம் செய்யக்கடவேனேயல்லது வேறுவிதமாய் என்மனமுகக்க யாதொன்றும் செய்யக்கடவேனல்லேனென்றும் அர்த்தம் கிடைப்பதால் தன்னுகப்புக்காகவே உண்டானவை களாகையால் தன் ஸ்வரூபத்திற்குத்தகாதவைகளாயும் அல்பஸுகங்களை யுண்டாக்கத்தக்கவைகளாயும், முடிவில் விரஸங்களாயும் அஸ்திரங்களாயும், ஜுகுப்ஸைப்படத்தக்கவை களாயுமிருக்கும் ஸ்திரீமுதலிய விஷயானுபவங்களில் ஆசையைஉண்டாக்கும் அஞ்ஞானம் தீர்ந்துவிடும்,

ஸகலவேத ஶாஸ்ரதார்த்தங்களாக ச்சொல்லப்படும் அர்த்பஞ்சகமும் இத்திருமந்த்ரத்தில் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டதாகின்றது.

அவையாவன பெறத்தக்கதான பரமாத்மாவின் ஸ்வரூபமும் அதைபெறும் ஜீவஸ்வரூபமும், அதைப் பெறுவதற்க்கு ஸாதன மானபக்திப்ரபத்தி முதலிய உபாயஸ்வரூபமும், அவ்வுபாயங்களி ஞல்கிடைக்கும் பல ஸ்வரூபமும் அதின் விரோதிஸ்வரூபமுமான ஐந்தர்த்தங்களாம்.

அவற்றுள் பிரணவத்திஞல் ஜீவஸ்வரூபமும், அகண்ட நமச் சப்தத்தால் உபாயஸ்வரூபமும் ஸகண்டநமச்சப்தத்தால் விரோதி யின் ஸ்வரூபமும், நாராயண பதத்திஞல் பரமாத்மாவின் ஸ்வரூப மும், அதின்மேல் வெளிப்படை யாயிருக்கும் நான்காவதுவேற்று மையிஞல் பல ஸ்வரூபமுமாக இவ்வைந்தர்த்தங்களும் இத் திருமந் த்ரத்தில் சொல்லப்பட் டிருக்கின்றனவாம். பின்னும் இம்மூல மந் த்ரத்தில் சொல்லப்படும் விசேஷார்த்தங்கள் பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களில் அறியத்தக்கவைகளாம்.

(அ)இவ்வாறு நான்கு ஸ்லோகங்களிஞல் மூலமந்த்ரத்தை வியாக் கியாக்யானஞ்செய்து ஆசார்யர்களின் திருவுள்ளத்திஞல் உகந்தரு ளப்பட்டதாயும் பிரபத்தியின் அனுஷ்டானக்கிரமத்தை விளங்கக் காட்டுவதுமான த்வயமென்னும் மந்த்ர ரத்னத்தை இரண்டுஸ்லோ கங்களிஞல் வியாக்கியானஞ் செய்கிருர்.

5 நேத்ருத்வம் நித்யயோகம்
ஸமுசிதகுணஜாதம் தனுக்யாபநம்ச
உபாயம் கர்த்வ்ய பாகம்
த்வத மிதுநபரம் ப்ராப்யமேவம் ப்ரஸித்தம்
ஸ்வாமித்வம் ப்ரார்த்தனஞ்ச
ப்ரபலதரவிரோதி ப்ரஹாணம் தஸைதாங்
மந்தாரம் த்ராயதேசேதி
அதிகதநிகம ஷ்ஷட்பதோயம் த்விகண்டஃ,

பதவுரை.

நேத்ருத்வம்=புருஷகாரத்தையும்
நித்யயோகம்=நித்யமானஸம்பந்தத்தையும்
ஸமுசித=மிகவும் தகுந்தவைகளான
குணஜாதம்=கல்யாணகுணங்களின் கூட்டத்தையும்
தநு=திவ்யமங்களவிக்ரஹத்தின்
க்யாபநம்=பிரகாசத்தையும்
உபாயம்=ஸாதனத்தையும்
கர்தவ்யபாகம்=செய்யத்தக்கதான உபாயத்தினுடைய அம்சத்தையும்
அத=பின்பு
மிதுந=லக்ஷ்மீநாராயணரூபமான
பரம்=உயர்ந்ததான
கம்யம்=பேற்றையும்
ஸ்வாமித்வம்=ஸ்வாமியாகவிருக்குகையும்
ப்ரார்த்தநாம்=பிரார்த்தனையையும்
ப்ரபலதர=மிகவும் பலமுள்ளவைகளான
விரோதி=விரோதிகளான அஹங்காரமமகாரங்களினுடைய
ப்ரஹாணம்=விடுவதையும்
தச=ஆகியபத்தர்த்தங்களையும்
மந்தாரம்=த்யானம்செய்கிறவரை
த்ராயதே(ச)=இரக்ஷிக்கின்றது.
இதி=இப்படிக்கு
ஷட்பத:=ஆறு பதங்களையுடையதாயும்
த்விகண்ட:=இரண்டு வாக்யங்களையுடையதாயு மிருக்கின்ற
அயம்=இந்த த்வயமென்னும் மந்த்ரமானது
அதிகத=அடையப்பட்டிருக்கின்ற
நிகம:=வேதத்தையுடையது.

இம் மந்த்ரத்தில் அடிமுதல் கடைவரையிலுமுள்ள பதங்களின் அர்த்தங்களை அடைவே அருளிச்செய்கிறார்.

(1) ஸ்ரீமஹாலக்ஷ்மியின் புருஷகாரமும், (2) பரமபுருஷனுடன் இவள் எப்பொழுதும், பிரியாமல் சேர்ந்திருப்பதும், (3) பகவானை ஆஶ்ரயித்தவர்களை இரக்ஷிப்பதற்கு மிகவும் தக்கவைகளான, வாத்ஸல்யம் ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஞானம், சக்தி, பூர்த்தி, இவைமுதலிய குணங்களின் கூட்டமும், (இவற்றுள் வாத்ஸல்யமாவது-ஆஶ்ரிதர்கள் அபராதிகளாக விருக்கச்செய்தேயும் அவ்வபராதங்களைப் பாராமல்அவர்களைஇரக்ஷிப்பதில் அருள்பொருந்தியவராய் இருப்பதாம். ஸ்வாமித்வமாவது - ஸர்வத்துக்கும் கர்த்தாவையிருக்கை.ஸௌசீல்யமாவது-தன்மேன்மையைப் பாராமல் தாழ்ந்தவர்களுடன் கூடியிருப்பதாம். ஸௌலப்யம்-ஸர்வோத்தம

னை பரமாத்மா ஸர்வரும் கிட்டும்படியான திவ்யரூபங்களையுடையவராயிருப்பதாம். ஸ்வாமித்வமுள்பட இந்நான்கு குணங்களும் பகவானை ஆஶ்ரயிப்பதற்குப் போந்தவைகளாம், ஞானமாவது பகவானை ஆஶ்ரயித்தவர்களிடங்களி லிருக்கும் போக்க வேண்டிய தீங்குகளையும் அவர்களுக்கு கிடைப்பிக்கவேண்டிய நன்மைகளையும் அறிவதற்குத்தக்கதான ஓர் ஞானமாகும். சக்தியாவது--நித்யஸம்ஸாரிகளான சேதநர்களையும் நித்யஸூரி ஸமாஜத்தில் சேர்ப்பிக்கத் தக்கதான பகவானுடைய ஓர்திறமையாகும். பூர்தியாவது-ஸர்வாபீஷ்டங்களினுலும் நிறைந்திருக்கையாம். பிராப்தியாவது-ஸர்வவிதத்தாலும் ஸர்வர்களுக்கும் பகவானே அடையத்தக்கவனுக விருக்கையாம். இந்நான்கு குணங்களும் ஆஶ்ரிதர்களின் பிரயோஜனத்தைக் கிடைப்பிக்கத்தககவைகளாம். (4) திவ்யமங்கள விக்கிரஹத்தைத் தெரிவிப்பதும், (இவ்வர்த்தம் மந்திரத்தில் திருவடிகளைச் சொல்லும் பதத்தால்குறிக்கப்பட்டதாகும்) (5) உபாயமும், (இவ்வர்த்தம் மந்த்ரத்திற்சொல்லிய ஶரணசப்தத்தின் அர்த்தமாகும்,) (6) பிரபத்திக்கு அதிகாரிகளான சேதநர்கள் அனுஷ்டிக்க வேண்டு மம்சமும், (இதுமந்திரத்திற்சொல்லிய ப்ரபத்யே என்னும்பதத்தின் அர்த்தமாம்) (7) லக்ஷ்மீநாராயண ரூபமான உயர்ந்த பேறும், (இது மந்திரத்தின்மேல் பாகத்திற்சொல்லிய ஸ்ரீமத் என்னும் பதத்தின் அர்த்தமாம்) (8) ஶேஷித்வமும், (இதுமந்த்ரத்தில் சொல்லியநாராயணபதத்தின் அர்த்தமாம்) (9)ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் யான்செய்யக்கடவேனென்னும் பிரார்த்தனையும், (இதுமந்த்ரத்தில் சொல்லிய நாராயண பதத்தின்மேலிருக்கும் நான்காவது வேற்றுமையின் அர்த்தமாம்) (10) சேதநகளுக்கு விரோதிகளான அஹங்கார மமகாரங்களை விடுவதும், (இது மந்த்ரத்திற் சொல்லிய நமஃ என்னும்பதத்தின் அர்த்தமாம்.)இதனுல் அஞ்ஞாந நிவர்த்தியும் அநாதிகர்மமூலங்களான ப்ரக்ருதி ஸம்பந்தம் முதலியவைகளின் நிவர்த்தியும் சொல்லித்தாகின்றது. இவைகள் நீங்காமல் மேற்சொல்லிய அஹங்கார மமகாரங்கள் கழியாது. ஆகையால் மேற்சொல்லிய இப்பத்தர்த்தங்களையும் அனுஸந்திக்குமவரை ஆறுபதங்களோடும் இரண்டுவாக்யங்களோடும் கூடியதாயும் கடவ

ல்லிமுதலிய உபநிஷத்துக்களில் கொண்டாடப்பட்டிருக்கும் த்வய மென்னும் இம்மந்த்ரம் இரக்ஷிக்கின்றது.

(அ)இவ்வாறு இம்மந்த்ர ரத்தினத்தின் பதார்த்தங்களை அருளிச்செய்து இவ்வர்த்தங்களை யனுவாதம்செய்வதுடன் வாக்கியார்த்தத்தை யருளிச்செய்கிறார்.

6 ஈஶாநாம் ஜகதாமதீஶ தயிதரம் நித்யாநபாயாம் ஶ்ரியம்
ஸம்ஶ்ரித்யாஶ்ரயணோசிதாகில குணஸ்யாங்க்ரீஹரேராஶ்ரயே
இஷ்டோபாயதயாஶ்ரியாச ஸஹிதாய ஆத்மேஶ்வராயார்த்தயே
கர்த்தும் தாஸ்யமஶேஷமப்ரதிஹதம் நித்யம் த்வஹம் நிர்மம:.

பதவுரை.

ஜகதாம்=உலகங்களுக்கு
ஈஶாநாம்=நியமிக்கிறவளாயும்
அதீஶ=ஸர்வேஸ்வரனான பகவானுக்கு
தயிதாம்=இஷ்டபார்யையாயும்
நித்ய=எப்பொழுதும்
அநபாயாம்=பகவானுடன் பிரிவில்லாதவளாயு மிருக்கின்ற
ஶ்ரியம்=ஸ்ரீமஹாலக்ஷ்மியை
ஸம்ஶ்ரித்ய=சரணமடைந்து
உபாயதயா=ஸாதனமாக
ப்ரபத்யே=அடைகிறேன்.
ஶ்ரியாச=ஸ்ரீமஹாலக்ஷ்மியுடனே
ஸஹிதாய=நித்யமாய்சேர்ந்திருக்கின்ற
ஆத்ம=ஜீவர்களுக்கு
ஈஶ்வராய=ஈச்வரனானபகவானுக்கு
ஆஶ்ரயண=சரணமடைவதற்கு
உசித=தக்கவைகளான
அகில=ஸமஸ்தங்களான
குணஸ்ய=கல்யாணகுணங்களையுடைய
ஹரே:=ஆஶ்ரிதர்களின் அபராதங்களைப் போக்குகிறவரான பகவானுடைய
அங்க்ரீ=திருவடிகளை
இஷ்ட=கோறியபயனுக்கு
அஹந்து=யான்
நிர்மம:=அஹங்கார மமகாரங்களில்லாதவனாய்
அஶேஷம்=ஸமஸ்தமான
அப்ரதிஹதம்=தடையன்றியில்
நித்யம்=ஸர்வகாலமும்
தாஸ்யம்=கைங்கர்யத்தை
கர்த்தும்=செய்வதற்கு
அர்த்தயே=பிரார்த்திக்கிறேன்.

இவ்வுலகங்களுகு ஈஶ்வரியாயும் ஸர்வேஶ்வரனை பகவானுக்கு இஷ்டமஹிஷியாயும் பகவானுடன் ஒருக்காலும் பிரிவில்லாதவளாயுமிருக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மியை புருஷகாரமாக ஶரணமடைந்து பின்பு ஆஶ்ரிதர்கள் சரணமடைவதற்குப் போந்தவைகளான வாத்ஸல்ய, ஸ்வாமித்வ, ஸௌஶீல்ய, ஸௌலப்ய, ஞான, சக்தி, பூர்த்தி, முதலியகல்யாணகுணங்களினால் விளங்குகிறவராயும், ஸர்வபாப நிவர்த்தகருமான பகவானுடைய திருவடிகளை நான்கோறிய மோக்ஷரூபமான பயனுக்கு ஸாதனமாக அல்லது நான்கோறிய ஸ்வலபோபாயமாக அடைகிறேன் (இதுத்வயத்தின் பூர்வகண்டத்தின் அர்த்தம்.) இப்படி சரணாகதர்களுக்கு புருஷகாரத்தைச்செய்யும் ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் சேர்ந்திரானின்றும் ஸர்வாத்மாக்களுக்கும் ஈஶ்வரனுமான ஸ்ரீமந்நாராயணனுக்கு அடியேன் அஹங்கார மமகாரங்களில்லாதவனாய் ஸர்வவிதகைங்கர்யங்களையும் ஸர்வகாலங்களிலும் ஸர்வாவஸ்தைகளிலும் செய்யப்பிரார்த்திக்கிறேன். இது உத்தரகண்டத்தின் அர்த்தம்

இங்கு இவ்வுலகங்களுக்குஈஶ்வரியென்றும் பகவானுக்கிஷ்ட மஹிஷியென்றும் மேற்சொல்லிய இரண்டு விசேஷணங்களினால் புருஷகாரோபயோகியான ஆஶ்ரிதர்களிடங்களில் வாத்ஸல்யமென்னும் அன்பு சொல்லப்பட்டதாகின்றது, இங்கு சொல்லிய ஸ்ரீ (1) என்னும் பதத்திற்கு ஆறு அர்த்தங்களுண்டு. அவையாவன=சேதநர்களினால் அடையப்படுகிறாளென்பது. இதனால் அபராதிகளான சேதநர்க்குவேண்டியதான மேற்சொல்லிய வாத்ஸல்யமென்னும் குணம் சொல்லப்பட்டதாகின்றது. (2) பகவானை அடைந்திருக்கிறாளென்பது. இதனால் பகவானை தன் வசப்படுத்திக் கொள்ளும்படியான மஹிமை சொல்லப்பட்ட தாகின்றது. (3) ஆஶ்ரிதர்கள் சொல்லும் விண்ணப்பங்களை கேழ்க்கிறாளென்பது. இதனால் ஆஶ்ரிதர் சொல்லிக்கொள்ளும் கார்யங்களை கேழ்க்கிறவளென்னும் அர்த்தம் சொல்லப்பட்டதாகின்றது. (4) தன்னைக் கிட்டாதவர்களையும் ஹிதமான திருவாக்குகளை அருளிச்செய்து அவர்களை கேழ்க்கச்செய்கிறாளென்பது. இதனால் தன்னிடத்தில் விமுகர்களாகவிருக்கும் சேதநர்களுக்கும் ஹிதோபதேசஞ்செய்கிறவளென்பது சொல்லப்பட்டதாகின்றது. (5) ஆஶ்ரிதர்

களின் தோஷங்களை நாசஞ்செய்கிறுளென்பது. இதனால் ஆஶ்ரிதர்களின் தோஷங்களைப் போக்குகிறவளென்பது சொல்லப்பட்டதாகின்றது. (6) ஆஶ்ரிதர்களை குணங்களினால் அதிகப்படுத்துகிறுளென்பது. இதனால் ஆஶ்ரிதர்களுக்கு ஸத்குணங்களை அதிகப்படுத்துகிறுளென்பது சொல்லப்பட்டதாகின்றது. இவ்வாறு ஆறு அர்த்தங்களைச் சொல்லும் ஸ்ரீயென்னும் பதம் இம்மஹாலக்ஷ்மிக்கு முதல்பெயராகவிருக்கின்றது. இவள் ஸகலர்களுக்கும் மாதாவாகையாலும் மிகுந்தவருள் நிறைந்தவளாயிருப்பதாலும் பகவானுக்கு புருஷகாரம் செய்வதற்காக இவ்வித திவ்யகுணங்களோடு கூடிய இம்மஹாலக்ஷ்மியை ஶரணமடைந்து ஆஶ்ரிதர்கள் ஶரணமடைவதற்குப் போந்தவைகளான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்ய ஞானசக்தி பிராப்திகளென்னும் குணங்களினால் விளங்குகின்ற பகவானுடைய திருவடிகளை நான் கோறியபயனுக்கு ஸாலபோபாயமாகப் போருகிறேன். இவ்வாறு ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன்பிறிவின்றி சேர்ந்து ஸகலஜீவர்களுக்கும் ஈஶ்வரனுயுமிருக்கும் ஸ்ரீமந்நாராயணனுக்கு யான் அஹங்கார மமகாரங்களில்லாதவனுய் ஸகலவிதகைங்கர்யங்களையும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் யாதொரு விரோதமுமில்லாமல் செய்ய ப்ரார்த்திக்கிறேன்.

இப்படி மத்யம ரஹஸ்யமான த்வயத்திற்கு வியாக்கியானஞ் செய்து, பின்பு அத்வயத்தின் அர்த்தவிவரணமாயும் பகவான் திருவுள்ள முகந்தருளிச் செய்யப்பட்டதுமான சரம ஶ்லோகத்திற்கு மேல் ஶ்லோகத்தினால் வியாக்கியானம் செய்கிறுர்-

7 மத் ப்ராப்த்யர்த்ததயா மயோக்தம்
அகிலம் ஸந்த்யஜ்ய தர்மம் புநঃ
மாமேகம் மதவாப்தயேஶரணமிதி
ஆர்த்தோ வஸாயம் குரு
த்வாமேவம் வ்யவஸாய யுக்தம்
அகில ஞானதி பூர்ணோஹ்யஹம்
மத்ப்ராப்திப்ரதிபந்தகைঃ விரஹிதம்
குர்யாம் ஶுசம் மாக்ருதাঃ.

பதவுரை

மத்=என்னுடைய
ப்ராப்தி=அடைவை
அர்த்த தயா=பிரயோஜநமாக
வுடைத்தாயிருக்குகையால்
மயா=என்னால்
உக்தம்=சொல்லப்பட்டிருக்கும்
அகிலம்=ஸமஸ்தமான
தர்மம்=கர்மயோக ஞானயோக
ங்களோடுகூடிய பக்தியோக
த்தை
ஸந்த்யஜ்ய=நன்ருகவிட்டு
ஏகம்=ஒருவனை
மாம்=என்னை
ஆர்த்த:=துன்பமடைந்த நீ
மத்அவாப்தயே=என்னைப்பெறு
வதற்கு
ஶரணம் இதி=உபாய மென்று
அவஸாயம்=நிச்சயத்தை
குரு=பண்ணு;

ஏவம்=இந்தப்படி
வ்யவஸாய=நிச்சயத்தோடு
யுக்தம்=கூடியிருக்கும்
த்வாம்=உன்னை
அகில=ஸமஸ்தமான
ஜ்ஞாநாதி=ஞானத்தைமுதலாக
வுடைய திவ்யகுணங்களினால்
பூர்ண:=நிறைந்தவனான
அஹம்=யான்
மத் ப்ராப்தி=என்னை அடைவ
தற்கு
ப்ரதிபந்தகை:=விரோதிகளான
அநாதி புண்யபாப ரூபங்க
ளான ஸர்வகர்மங்களினாலும்
விரஹிதம்=நீங்கியவனாக
குர்யாம்=பண்ணக்கடவேன்;
ஶுசம்=வ்யஸநத்தை
மாக்ருதா:=பண்ணவேண்டாம்.

உனக்கு ஹிதோபதேசம் செய்யும் என்னால் என்னைப்பெறுவதற்கு ஸாதனங்களாகச் சொல்லப்பட்டிருக்கும் கர்மயோக ஞானயோக பக்தியோகங்களாகிற மோக்ஷஸாதனங்களைவிட்டு அக்கர்மயோகாதிகளை அனுஷ்டிக்க ஶக்தியில்லாமையால் வ்யஸநமடைந்திருக்கும் நீ என்னை ஒருவனையே உபாயமாக நிச்சயிக்கவேண்டும், இங்குகர்மயோகாதிகளை விட்டென்று ஸாமான்யமாகச்செல்லப்பட்டிருந்தபோதிலும் அவைகள் இப்பிரபத்திக்கு அங்கங்களென்னும் புத்தியை மாத்திரம் விடவேண்டுமென்பது ஶாஸ்திரங்களில்வழங்கிவரும் நியாயவிமர்ஶையால் கிடைத்திருக்கின்றது. இப்படிக்கில்லாமல் ஸர்வகர்மங்களின் ஸ்வரூபத்தை விடவேண்டுமென்று அர்த்தம்கொண்டால் ஸர்வவர்ணஸங்கரமும் ஸர்வஶாஸ்திர விரோதங்

களுமுண்டாகும் என்று ஶாஸ்திரமறிந்தோர்களான பூர்வாசாரி கள் ஸித்தாந்தம் செய்தார்கள். ஆகையால் நித்தியநைமித்திகாதி கர்மங்களை கைங்கர்ய புத்தியாய் அவஸியம் செய்யவேண்டுமென்பது கருத்து. இது சரமஸ்லோகத்தின்முதல் பாதியின் அர்த்தம்.

இவ்விதநிச்சயத்தோடு கூடியிருக்கும் உன்னை ஞானசக்தி தயாதி குணங்களோடு கூடியயான் என்னை அடைவதற்கு விரோதிகளாக விருக்கும் புண்யபாபரூபங்களான ஸர்வகர்மங்களினின்றும் நீக்கி விடுகிறேன். நீ ஸாபாயமாயும் துஷ்கரமாயுமிருக்கும் கர்மயோகாதி ஸாத்யோபாயங்களை நாம் எப்படிசெய்வோமென்று வ்யஸநமடை யவேண்டாம்.

இங்கு பகவானை அடைவதற்கு விரோதிகளாக விருக்கு மவை யனைத்தும் பாபங்களென்று சொல்லப்படுகின்றன. அவை யாவன— அவித்யை, கர்மம், வாஸனை, ஆசை, பிருகிருதிஸம்பந்தம் அவற்றின் பேதமான தேஹாத்மாபிமானம், அதைப்பற்றியதான அஹங்கார மமகாரங்கள் என்பவைகளாம் இங்குசொல்லிய அவித் யையாவது-ஞான மில்லாமை, அது அஞ்ஞாநம் அந்யதாஞானம், விபரீதஞானம் எனமூன்றுவகைப்படும். இவற்றுள் அந்யதாஞான மாவது-ஒன்றைமற்றொன்றாக அறிவதாகும். விபரீதஞானமாவது- சத்ருவைமித்ரனாக நினைப்பது முதலியவைகளாம். கர்மங்கள் புண்ய ங்களென்றும் பாபங்களென்றும் இரண்டுவகைப்படும். வாஸனையா வது-அநாதியாக தாம்செய்துவந்த செயல்களை தம்மிச்சையன்றி யிலே செய்விக்கும் ஓர்பழக்கம். பிருகிருதி ஸம்பந்தமாவது. ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான தேஹஸம்பந்தம். இங்கு புண்யகர்மங்களும் பாப கர்மங்களைப்போலவே மோக்ஷவிரோதிகளாகையால் பாபங்களெ ன்று செல்லப்படுகின்றன.

இவ்விரண்டு கர்மங்களும் பூர்வாகங்களென்றும் உத்தராகங்க ளென்றும் ஒவ்வொன்றும், இரண்டுவகைப்படுகின்றன. அவற் றுள் தாம் பிரபத்தியனுஷ்டிப்பதற்கு முன்செய்தகர்மங்கள் பூர்வா கங்களென்னப்படுகின்றன. பிரபத்தியனுஷ்டித்தபின் செய்யப் படுங்கர்மங்கள் உத்தராகங்களென்னம்படு கின்றன். இவற்றுள் பூர்வாகங்கள், ஸஞ்சிதகர்மங்களென்றும், பிராரப்த கர்மங்களென்

றும் இரண்டுவகைப்படுகின்றன. அவற்றுள் அவற்றின் பயன்களை கொடுக்க ஆரம்பியாத கர்மங்கள் ஸஞ்சிதகர்மங்களென்னப்படுகின்றன. அவற்றின் பயனைக்கொடுக்கஆரம்பித்தகர்மங்கள் பிராரப்தகர்மங்க ளென்னப் படுகின்றன. அப்பிராரப்தகர்மங்களும், அப்யுபகத ப்ராரப்தகர்மங்களென்றும் அனப்யுபகத ப்ராரப்தகர்மங்களென்றும், இரண்டுவகைப்படுகின்றன. அப்யுபகதப்ராரப்த கர்மங்களாவது-தாம்பிரபத்திசெய்யும்போது அனுபவிக்க ஒப்பு கொண்ட பிராரப்த கர்மங்களாம். அதெப்படிக்கென்றால், பிரபத்தி செய்யும்போது தம்முடைய தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தைக் கோறிப் பிரபத்திசெய்தால் தேஹமிருக்குமளவில் அனுபவிக்க வேண்டியவைகளானப் பிராரப்தகர்மங்கள்ஒப்புக் கொள்ளப்பட்டதாகின்றன. பிரபத்தி செய்யும்போது தாம் அனுபவிக்க ஒப்புக் கொள்ளாத பிராரப்த கர்மங்கள் அனப்யுபகதப் பிராரப்த கர்மங்களாம்.

மிகவும் ஞானாதிகர்களான ஆர்த்தப்ரபன்னர்கள் தம்முடைய பிராரப்தகர்மங்களை அனுபவிக்க ஸம்மதியாமல் தாம் ப்ரபத்தி செய்த உடனே மோக்ஷம் கிடைக்க வேண்டுமென்று கோறி அனுஷ்டிக்கப்படும் ப்ரபத்தியில் உடனே மோக்ஷம்கிடைப்பதால் அவர் அப்பொழுது, அனுபவிக்க வேண்டியப் பிராரப்தகர்மங்கள் ஒப்புக் கொள்ளப் படாதவைகளாகின்றன. உத்தராகங்களும் புத்திபூர்வங்களென்றும் அபுத்திபூர்வங்களென்றும் இரண்டுவகைப்படுகின்றன. அவற்றுள் அபுத்தி பூர்வாகங்கள் அவர்கள் அனுஷ்டித்த பிரபத்திபலத்தால அவர்களைச்சேருவதில்லை. புத்தி பூர்வோத்தராகங்கள் பிராயச்சித்தத்தால் சழிகின்றன. பிராயச்சித்தமும் செய்யாவிடில் அனுபவத்தால் தீர்ந்து விடுகின்றனவாம்.

பக்தியோகமென்னும் உபாயாந்தரத்தை யனுஷ்டித்தவர்களுக்கு மேற்சொல்லிய கர்மங்களில் பிராரப்த கர்மங்களும் பிராயச்சித்த மனுஷ்டிக்கப்படாத உத்தராகங்களும் அனுபவத்தாலேயே, கழியவேண்டியவைகளாம். அபுத்திபூர்வோத்த ராகங்களோவென்னில்? பிரபன்னடரிடத்திற் போலவே அவர்களிடத்திலும் சேராது. திருப்த ப்ரபன்னருக்கு அப்யுபகதப்பிராரப்த கர்மகளும்

பிராயச்சித்தமில்லாத புத்திபூர் வோத்தராகங்களும் அனுபவிக்கத் தீர்ந்துவிடும். ஸஞ்சிதகர்மங்களும் அநப்யுபகதப்பிராரப்த கர்மங்களும் பிரபத்தியால் நசித்துவிடும். அபுத்திபூர்வோத்தராகங்கள் அவரிடத்திற் சேராது.

ஆர்த்த ப்ரபன்னருக்கோ வென்னில்? இக்கர்மங்களனைத்தும் அவர் அனுஷ்டித்த ப்ரபத்தியால் நசித்துவிடும்-இவ்வார்த்த ப்ரபன்னர்களுக்குப் பிரபத்தியனுஷ்டித்த உடனேமோக்ஷம் உண்டாய் விடுவதால் இவர்களுக்கு உத்தராகங்கிடையாது. இங்குமோக்ஷ விரோதிகளான ஸகலபாபங்களின் நிவிருத்தியைமுன்னிட்டுருக்கும் மோக்ஷம் பயனுகையால் அவ்விரண்டுகளேயும் சொல்லவேண்டியிருக்க இங்கு பாபங்களின் நிவிர்த்தியைமாத்திரம் சொன்னதற்கு கருத்தென்னவென்னில், மோக்ஷவிரோதிகளான பாபங்கள் கழிந்தால் மோக்ஷம் தன்னுல் கிடைத்து விடுமென்பதாம்.

மேல் ஸ்லோகத்தினுல் தமக்குண்டாயிருக்கும் சோகத்திற்குக் காரணத்தையும் அது நீங்கும் விதத்தையும் தெரிவித்துத் தமக்கு தேஹமிருக்குமளவும் தம்முடைய ஆத்மரக்ஷணத்தில் தமக்குபளு வில்லாமலிருப்பதை யனுஸந்திக்கிறுர்.

8 நிஸ்சித்ய த்வததீநதாம் மயி ஸதா
கர்மாத் யுபாயாந் ஹரே
கர்த்தும் த்யக்துமபி ப்ரபத்துமநலம்
ஸீதாமி து:காகுல:
ஏதத் ஜ்ஞாந முபேயுஷோ மமபுந:
ஸர்வாபராத க்ஷயம்
கர்த்தாஸீதி த்ருடோஸ்மிதேதுசரமம்
வாக்யம் ஸ்மரந் ஸாரதே:.

பதவுரை

ஹரே=ஆஸ்ரிதர்களின் பாபயங்களைப்போக்கும் வல்லமையுள்ள பகவனே
மயி=என்னிடத்தில்,
ஸதா=ஸர்வகாலமும்,
த்வத்=உம்முடைய,
அதீநதாம்=அதீனமாக விருக்குகையை,
நிஸ்சித்ய=நிச்சயித்து,
கர்ம=கர்மயோகத்தை,
ஆதி=முதலாகஉடைய,
உபாயாந்=உபாயங்களை,
கர்த்தும்=செய்வதற்கும்,
த்யக்தும்=விடுவதங்கும்,
ப்ரபத்துமபி=பிரபத்திசெய்வதற்கும்,
அநலம்=அசக்தனை யான்,
துஃக=வ்யஸனத்தினல்,
ஆகுலஃ=கலங்கியவனய்,
ஸீதாமி=சோர்ந்துவிடுகிறேன்,
ஸாரதேஃ=ஸாரதியாயிருந்த,
தே=உம்முடைய,
சரமம்=கடைசியான,
வாக்யம்=வார்த்தையை,
ஸ்மரந்=அறிந்த யான்,
ஏதத்=இந்த,
ஜ்ஞாநம்=ப்ரபத்திரூபஞானத்தை,
உபேயுஷஃ=அடைந்திருக்கிற,
மே=என்னுடைய,
ஸர்வ=ஸமஸ்தமான,
அபராத=அபராதங்களுடைய.
க்ஷயம்=நாஸத்தை.
கர்த்தாஸி=பண்ணுவீர்,
இதி=என்று,
த்ருடோஸ்மி=உறுதியான நம்பிக்கையோடு கூடியவனுக ஆகிறேன்.

வாரீர்பகவானே! நான் எப்பொழுதும் உமக்குப் பராதீனனுகையால் இக்கர்மயோக ஞானயோக பக்தியோகங்களாகிற மோக்ஷோபாயங்களை யனுஷ்டிக்களனக்கோர் சுதந்திரமில்லே. ஆகிலும் ஸாஸ்திரங்களில் சேதநர்களை யுத்தேசித்து இவ்வுபாயங்களை யனுஷ்டிக்கும்படியாய் நீர் விதித்திருப்பதால் இவ்வுபாயங்களை யனுஷ்டிக்க அடியேனுக்கு உம்மால் சுதந்திரம் கொடுக்கப்பட்டதாகின்றது. அப்படிக்கிருந்தும் மிகவும் அற்பஞானசக்திளோடுகூடிய அடியேன் இவைகளை யனுஷ்டிக்க மிகவும் அசக்தனுகவிருக்கிறேன். ஆனல் இவ்வுபாயங்களை யனுஷ்டியாமல் விட்டுவிடுவோமென்னில்? இம்மோக்ஷ புருஷார்த்தத்தில் அபேக்ஷையுள்ள அடியேனுக்கு அவை

களுக்கு ஸாதநங்களான இவ்வுபாயங்களை அனுஷ்டிக்க ஆசையுண்டாவதால் விடுவதற்கும் அசக்தனாகவிருக்கிறேன். ஆனால் இவ்வுபாயங்களை யனுஷ்டிக்க அசக்தராகவிருக்குமவரையுத்தேசித்து ஸுலபோபாயமாக ஶாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் இப் பிரபத்தி யனுஷ்டிக்கக்கூடுமே யென்னில் இதற்கு அங்கமாய் விதிக்கப்பட்டிருக்கும் மஹாவிஶ்வாஸம் கிடைப்பது மிகவும் அரிதாகையால் இப்பிரபத்தியையும் அனுஷ்டிக்க அஶக்தனாகவிருக்கிறேன். இப்படிக்கோர் கதியு மில்லாமையாலுண்டாகும் துன்பத்தினால் மனமொடிங்கி நின்றேன்.

இப்படிக்கிருக்கு மடியேன் அர்ஜுநனுக்கு ஸாரதியாக ஹிதோபதேசம்செய்த உம்முடைய கடைசி வார்த்தையான கீதாஶாஸ்திரத்தின் சரமஶ்லோகத்தில், என்னை நீ சரணமடை, உன்னை ஸர்வ பாபங்களினின்றும் நீக்கிவிடுகிறேனென்று தேவரீர் அருளிச்செய்ததை நினைத்து மஹாவிஶ்வாஸமுடையனாய் இப்பிரபத்தியை யனுஷ்டித்தேன். இதனால் தேவரீர் என் ஸர்வ பாபங்களையும் போக்கிவிடுமென்று உறுதியான நம்பிக்கையோடுகூடியவனாக விருக்கிறேன்.

ஶ்ரீ பராஶரபட்டர் திருவடிகளே ஶரணம்.

அஷ்டச்லோகி - ஸம்பூர்ணம்.

பட்டர் ஸ்ரீஸூக்தி.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் திருமஞ்சனமாடி ஈரவாடையுடன் துளபமாலையைச் சார்த்திக்கொண் டெழுந்தருளி யிருக்கையில் அந்த அவஸரததை மங்களாசாஸனம் பண்ணி ஆநந்தபரிதரான நான்கு திருநக்ஷத்திரமுடைய பட்டரைப்பார்த்து பெருமாள் எப்படி எழுந்தருளியிருக்கிறுர் என்றுவினுவிய பெரியோர்களுக்கு உத்தரமாக இந்தஸ்லோகம் அருளிச்செய்தது, அன்றியிலே இதுஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் வினுவிடைகளாக செய்யப்பட்டிக்கிறது.

த்வம்மே ஹம்மே குதஸ்தத் ததபிகுதः
இதம் வேதமூல ப்ரமாணுத்
ஏதச்சாநாதி ஸித்தாதநுபவ விபவாத்
ஸோபி ஸாக்ரோஸஏவ
க்வாக்ரோஸः கஸ்யகீதாதிஷு மமவிதிதः
கோத்ர ஸாக்ஷீ ஸுதீஸ்யாத்
ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸஇதி ந்ருகலஹே
ம்ருக்ய மத்யஸ்தவத்வம்.

பதவுரை

(ஹேஜீவ) த்வம்=நீ,
மே=என்னுடையதாஸன்,
பகவானே) அஹம்=நான்,
மே=எனக்கே உரியவன்,
உமக்கு தாஸனல்லேன்,
(ஜீவனே) தத்=நீசொல்லுகிற
அந்த விஷயம்,
குதः=எப்படிருஜுவாகிறது,
(பகவனே) ததபி=தேவரீர்
அருளிச் செய்ததுதான்,
குதः=எப்படிருஜுவாகிறது,

(அடாஜீவா) இதம்=இந்த என்
னுடைய கக்ஷியானது,
வேதமூல ப்ரமாணுத்=வேத
மென்கிற மூலப்ரமாணத்
தாலே நம்பப்படுகிறது,
(நாராயணு) ஏதச்ச=இந்த என்
னுடைய கக்ஷியும்,
அநாதிஸித்தாத்=அனுதிகால
மாய் ஸாதித்துக்கொள்ளப்
பட்ட,
அநுபவவிபவாத்=நிராக்ஷேப

மான பலவிதமான அநுபவத்தின்உறுதியினலே நம்பப்படுகிறது, ஆதலால் தேவரீருடைய வாதத்திற்கு காலதோஷம் வந்து விட்டதன்றோ,

(அடாஜீவா) ஸோபி=உன்னுடைய அந்த அநுபவமோவென்னில்,'

ஸாக்ரோஶஏவ=நீ யனுபவிக்கத் துடங்கின காலம்முதல் அடிக்கடி ஆக்ஷேபிக்கப்பட்டே யிருக்கிறது. ஆகையால் என்னுடையவாதம் காலதோஷத்துக்கு முற்பட்டதே யாகையால் என்னுடைய கக்ஷியே நியாயமானது,

(ஸ்ரீபகவானே) ஆக்ரோஶ:-க்வ-கஸ்ய=எவ்விடத்தில் யாருடைய ஆக்ஷேபம் நடந்தது?

(அடாஜீவா,) கீதாதிஷு=கீதை முதலான இடங்களில்,

மம=என்னுடைய ஆக்ஷேபமானது,

விதித:=ப்ரஸித்தமாக விளங்குகிறது.

(ஸ்ரீபதி!) அத்ர=இப்படிதேவர் ஆக்ஷேபஞ்செய்த விஷயத்திலே,

க:=எவன்,

ஸாக்ஷீ=கண்ணாலேகண்டவன்,

(அடாஜீவா) ஸுதீ:=ஸ்ரீவியாஸர், பீஷ்மர்முதலான சிறந்த ஜ்ஞாநிகளே,

ஸ்யாத்=ஸாக்ஷிகளாகிறார்

(திருமாலே) ஹந்த=இது மிகவும் வியப்பு,

ஸ:=அந்தஜ்ஞாநிகள்,

த்வத்பக்ஷபாதீ=(ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்) என்று ஞாநிகள் தேவருக்கே சரீரபூதாளாகையால் அவர்கள் தேவருடைய கக்ஷியில் சேர்ந்து தேவரீர் பக்கம் ஸாக்ஷிசொல்லார்களோ? அவசியம் சொல்வார்கள். ஆகையால் அந்தஸாக்ஷிகளை நான்நம்பேன்,

இதி=என்றிந்தப்படியாக,

ந்ருகலஹே=ஜீவாத்துமாதோராவழக்கனுக வாதம் பண்ணுகையில்,

(ஸ்ரீரங்கநாதா) த்வம்=தேவரீர்,

ம்ருக்யமத்யஸ்தவத்=வழக்கைத் தீர்ப்பவ னில்லாமையால் ப்ரமாணஞ்செய்கிறவன் போலே எழுந்தருளியிருக்கிறீர்.

பிரமாணஞ்செய்கிறவன் ஸ்நாநஞ்செய்து ஈரவாடையுடுத்துக் துளபமாலை யணிந்து கொள்வது உலகவழக்கமாதலின் பட்டர் இவ்வண்ணம் கற்பனைசெய்தருளினர்.

ஸ்ரீ பராஶரபட்டர் திருவடிகளே ஶரணம்.

திருமந்த்ரம்.

ஓம் நமோ நாராயணாய.

த்வயம்,

ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே,
ஸ்ரீமதே நாராயணாய நமஃ

சரமஶ்லோகம்.

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ.

திருமந்த்ரம் ஸ்வரூபஞ் சொல்லுகிறதென்று திருக்குருகைப் பிரான்பிள்ளான் அநுஸந்தித் தருளுவர்;

திருமந்த்ரம் ப்ராப்யம் சொல்லுகிற தென்று பிள்ளைதிரு நறையூரரையர் அநுஸந்தித் தருளுவர்;

இவ்வாத்மாவினுடைய அநந்யார்ஹத்வம் சொல்லுகிறதென்று நஞ்சீயரநுஸந்தித்தருளுவர்;

இவ்வாத்மாவினுடைய பாரதந்த்ரியம் சொல்லுகிறதென்று எம்பார் அநுஸந்தித்தருளுவர்;

திருமந்த்ரம் மூன்றுபதத்தாலும்-ஜ்ஞாந வைராக்ய பக்திகளை வெளியிடுகிறதென்று முதலியார் அநுஸந்தித் தருளுவர்;

திருமந்த்ரம் மூன்று பதத்தாலும் - அபிஜந வித்யா வ்ர்த்தங்களை வெளியிடுகிறதென்று ஆளவந்தார் அநுஸந்தித்தருளுவர்;

திருமந்த்ரம் அர்த்த பஞ்சகத்தையும் சொல்லுகிறதென்று நம்பிள்ளை அநுஸந்தித்தருளுவர்;

பாணிக்ரஹணமும் உடன்மணநீரும் சதுர்த்திகலவியும் சொல்லுகிறதென்று பிள்ளையுறங்காவில்லி தாஸர் அநுஸந்தித்தருளுவர்,

ஸ்வரூபத்தில் உணர்த்தியையும், ஸ்வரக்ஷணத்தில் அஶக்தியையும், எம்பெருமானைப் பேணுகையையுஞ் சொல்லுகிறதென்று முதலியாண்டான் அநுஸந்தித்தருளுவர்.

ஸ்ரீவைஷ்ண அச்சுக்கூடம், சென்னை.

ஸ்ரீராமஜயம்

ஸ்தோத்ர புஸ்தகங்கள்

(ப்ரதிபத தாத்பர்யத்துடன்)

அஷ்ட ஸ்லோகீ	0	4	0
ஆளவந்தார் ஸ்தோத்ரம்	0	12	0
ஆதித்ய ஹ்ருதயம்	0	2	0
முகுந்தமாலை	0	6	0
கோபிகா கீதை	0	4	0
ஸ்ரீ குணரத்ன கோஶம்	0	8	6
லக்ஷ்மீ அஷ்டோத்தர ஸ்தோத்ரம்	0	2	0
பஜகோவிந்தம்	0	3	0
க்ருஷ்ண கர்ணாம்ருதம்	1	8	0
ராம கர்ணாம்ருதம்	1	0	0
சதுஸ் லோகீ	0	3	0
கோதா சதுஸ்லோகி	0	2	0
ரங்கநாத ஸ்தோத்திரம்	0	2	0
பரத்வாதி பஞ்சக ஸ்துதி	0	3	0
யதிராஜ விம்ஶதி	0	4	0
கோபால விம்ஶதி	0	2	0
ஸ்ரீ ஸ்தவம் (கூரத்தாழ்வான்)	0	4	0
ஸ்ரீ ஸ்துதி (இந்திர க்ருதம்)	0	2	0
க்ஷமாஷோடஸீ	0	4	0
புருஷ ஸூக்தம்	0	4	0
ஸ்ரீஸூக்தம் பூஸூக்தம் நீளாஸூக்தம்	0	4	0
லக்ஷ்மீந்ருஸிம்ஹகராவலம்ப ஸ்தோத்திரம்	0	2	0
ஹரிமீடே ஸ்தோத்திரம்	0	4	0
ஹரிமீடே ஸ்தவம்	0	10	0
தேவீ ஸ்தோத்திர கதம்பம்	0	5	0
ஸௌந்தர்யலஹரி	1	12	0

பட்டாபிராமன் கம்பெனி.

ஸ்ரீ வைஷ்ணவ கிரந்தாலயம்

183, தங்சாலை வீதி, மதராஸ்,